ஊடக அறிவித்தல் இல. – 59

# தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

### மதத்தலங்களில் மேற்கொள்ளப்படும் தேர்தல் பிரசார நடவடிக்கைகள்

2020 ஆகஸ்ட் மாதம் 05 ஆந் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுடன் தொடர்புடைய, மதத்தலங்களை அடிப்படையாககொண்டு மேற்கொள்ளப்படும் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் பற்றிய முறைப்பாடுகள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

02. குறிப்பாக கொழும்பு/ கம்பஹா/ களுத்துறை/ அம்பாந்தோட்டை, அம்பாறை ஆகிய மாவட்டங்களைப் பயன்படுத்தி பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது பற்றிய ஏராளமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அவை தொடர்பான விசாரணை நடவடிக்கைகள இடம்பெற்று வருகின்றன.

03. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 79 ஆம் பிரிவின் கீழ் மதத்தலமொன்றில் மேற்கொள்ளப்படும் ஒரு பிரசார நடவடிக்கையை அல்லது மதம் சார்ந்த ஒரு கூட்டத்தில் கட்சி/ குழு/ வேட்பாளர் ஊக்குவிக்கப்படும் விதத்தில் அல்லது பாதிப்புக்குள்ளாகும் விதத்தில் கருத்துத் தெரிவித்தல் 'தகாத செல்வாக்கொன்றாக' அமைவதுடன், அது தண்டனை அளிக்கப்படத்தக்க ஒரு குற்றமாகும். எனினும், தேர்தல் காலப்பகுதியில் கட்சி/ குழு/ வேட்பாளரை ஊக்கப்படுத்தும் விதத்திலான நடவடிக்கைகளுக்கு மதத்தலங்களைப் பயன்படுத்துவதற்கு தயவுசெய்து இடமளிக்காமல் இருக்குமாறும் கட்சி/ குழு/ வேட்பாளரை ஊக்கப்படுத்தும் அல்லது பாதிப்புக்கு உள்ளாகக் காரணமாக அமையக்கூடிய விதத்திலான செயற்பாடுகளை தயவுசெய்து தவிர்த்துக் கொள்ளுமாறும் அனைத்து வணக்கத்திற்குரிய தேரர்களிடமும் அனைத்து மதகுருமார்களிடமும்/ துறவுநிலை பூண்டவர்களிடமும் மிகவும் கௌரவத்துடன் வேண்டுகின்றோம்.

04. மதத்தலங்களில் கட்சி/ குழு/ வேட்பாளரை ஊக்கப்படுத்தும் விதத்திலான கூட்டங்களை நடாத்துவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் மத வழிபாடொன்றின்போது/ கூட்டமொன்றின்போது எவ்விதத்திலும் கட்சி/ குழு/ வேட்பாளரை ஊக்கப்படுத்துவதற்கு அல்லது பாதிப்புக்கு உள்ளாவதற்குக் காரணமாக அமையக்கூடிய விதத்தில் கருத்துக்களைத் தெரிவித்தல் உள்ளிட்ட எந்தவொரு கருமத்தையும் மேற்கொள்வதற்கு எந்தவொருவருக்கும் இடமளிக்காமல் இருக்குமாறும், அனைத்து அரசியல் கட்சிகளினதும் குழுக்களினதும் அதிகாரம்பெற்ற முகவர்களும் குழுத் தலைவர்களும் வேட்பாளர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் வேண்டப்படுகின்றனர்.

05. யாதேனுமொரு விதத்தில் மேற்கூறியவாறு யாதேனும் கட்சி/ குழு/ வேட்பாளரை ஊக்கப்படுத்தும் அல்லது பாதிப்புக்கு உள்ளாக்கும் விதத்தில் கருமங்கள் இடம்பெறுமாயின், அது தொடர்பாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ அலகிற்கு அல்லது தேர்தல் ஆணைக்குழுவில் நிறுவப்பட்டுள்ள தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு அறிவிக்குமாறு அனைத்துப் பிரசைகளிடமும் தேர்தல் ஆணைக்குழு வேண்டிக்கொள்கிறது.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை
இராஜகிரிய

2020.07.20